# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

## அறிவிப்புகள்
## 2022 – 2023

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

அறிவிப்புகள்

2022 - 2023

**த. மனோ தங்கராஜ்**

தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

**2022**

## 1) தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் வணிகச் செயல்முறை மேலாண்மை (BPM) நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான கொள்கை.

தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் வணிகச் செயல்முறை மேலாண்மைத் (BPM) துறையானது இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி ஊக்கியாகவும், குறிப்பாக இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் வேலைவாய்ப்பு வளர்ச்சிக்கான உந்து சக்தியாகவும் திகழ்கிறது.

மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்பம் (IT) மற்றும் வணிகச் செயல்முறை மேலாண்மை (BPM) நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு, ஒரு புதிய கொள்கை உருவாக்கப்படும்.

**2) எல்கோசெஸ் (ELCOSEZ), கங்கைகொண்டான், திருநெல்வேலியில் ஆயத்த அலுவலக இடவசதி (Plug-and-Play facility).**

தொடக்கநிலை நிறுவனங்களுக்கான சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், இரண்டாம் நிலை நகரங்களில் சிறிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைவதை ஊக்குவிக்கவும், திருநெல்வேலி, கங்கைகொண்டானில் உள்ள ELCOSEZ-இல் தற்போதைய தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில், மொத்தம் 30,000 சதுர அடியில், தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை (IT/ITeS) நிறுவனங்கள் மற்றும் தொடக்கநிலை நிறுவனங்களுக்கான (Start-ups) ஆயத்த அலுவலக இடவசதி (Plug-and-Play facility) ரூ. 6 கோடி செலவினத்தில் நிறுவப்படும். இதற்கான செலவினத்தை, எல்காட் நிறுவனம் ஏற்கும்.

## 3) எல்கோசெஸ் (ELCOSEZ), விஸ்வநாதபுரம், ஓசூரில் ஆயத்த அலுவலக இட வசதி (Plug-and-Play facility).

தொடக்கநிலை நிறுவனங்களுக்கான சுற்றுச்சூழலை மேம்படுத்தவும், இரண்டாம் நிலை நகரங்களில் சிறிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைவதை ஊக்குவிக்கவும், விஸ்வநாதபுரம், ஓசூரில் உள்ள ELCOSEZ-இல் தற்போதைய தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தில், மொத்தம் 27,461 சதுர அடியில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை (IT/ITeS) நிறுவனங்கள் மற்றும் தொடக்கநிலை நிறுவனங்களுக்கான (Start-ups) ஆயத்த அலுவலக இடவசதி (Plug-and-Play facility) ரூ.6.86 கோடி செலவினத்தில் நிறுவப்படும். இதற்கான செலவினத்தை, எல்காட் நிறுவனம் ஏற்கும்.

## 4) சென்னை. கோட்டூர்புரத்தில் உள்ள ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப தனித்துவ வளாகம் (Integrated IT Signature Complex).

சென்னை. கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்குச் (Tamil Virtual Academy) சொந்தமான நிலத்தில், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் இணைந்து வேலைசெய்யும் இடத்துடன் கூடிய ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப தனித்துவ வளாகம் 2.6 லட்சம் சதுர அடியில் ரூ.150 கோடி செலவினத்தில் அமைக்கப்படும். இதற்கான செலவினத்தை, எல்காட் நிறுவனம் ஏற்கும்.

## 5) தமிழ்நாடு இ-சேவை மையங்கள் மற்றும் குடிமக்கள் வலைதளத்தில் கூடுதலாக 100 மின்னணு சேவைகள்.

மாநிலத்தில் இ-சேவை மையங்கள் மற்றும் குடிமக்கள் வலைதளம் வாயிலாகத் தற்போது முறையே 191 மற்றும் 72 எண்ணிக்கையிலான அரசின் சேவைகள் குடிமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதனால், குடிமக்கள் சேவைகளை நேரடியாகத் தொடர்ந்து 24 மணி நேரமும் பெற இயலும். இ-சேவை மையங்கள் மற்றும் குடிமக்கள் வலைதளத்தில், தற்போது வழங்கப்பட்டுவரும் குடிமக்களுக்கான அரசின் சேவைகளுடன் கூடுதலாக 100 மின்னணு வாயிலான சேவைகளை வழங்கத் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) திட்டமிட்டுள்ளது.

## 6) தமிழ்நாடு டிஜிட்டல்மயமாக்கல் (DiTN) வியூகம்.

தகவல் தொழில்நுட்பவியல் துறை, வெளிப்படையான மற்றும் குடிமக்களை மையப்படுத்திய அரசாங்கத்தை வழங்குவதற்கான தொலைநோக்குப் பார்வையுடன், அனைத்துத் துறைகளும் தங்கள் செயல்பாடுகளை டிஜிட்டல்மயமாக்க உதவுவதை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. அனைத்துத் துறைகளும் தங்களது முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (Key Performance Indicators) மற்றும் விளைவுகளை (Outcomes) எட்டுவதற்கு தமிழ்நாடு டிஜிட்டல்மயமாக்கல் வியூகம் (DiTN) உதவும். மேலும், தமிழக மக்களுக்கு விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய, பதிலளிக்கக்கூடிய மற்றும் வெளிப்படையான (SMART- Swift, Monitorable, Accessible, Responsive and Transparent) நிர்வாகத்தை வழங்கும். தமிழ்நாடு டிஜிட்டல்மயமாக்கல் (DiTN) வியூகம், டிஜிட்டல் முதிர்ச்சியை மதிப்பிடுவது முதல் தகவல் தொழில்நுட்ப வியூகத்தைச் செயல்படுத்துவது வரையிலான அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்கும்.

தமிழ்நாடு டிஜிட்டல்மயமாக்கல் (DiTN) வியூகம், தகவல் தொழில்நுட்பத் திறனை ஒவ்வொரு துறைசார் அலுவலகத்திலும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அனைத்து விதமான தகவல் தொழில்நுட்பத் திறன்பெற்ற மனிதவளத்தைக் கொண்ட ஒரு "துறைசார் டிஜிட்டல் யூனிட் (Departmental Digital Unit-DDU)" ஒவ்வொரு துறைசார் அலுவலகத்திலும் ஏற்படுத்துவதன்மூலம், இந்நோக்கத்தை எய்திட முடியும். இதற்கான நபர்கள், தமிழ்நாடு மின்ஆளுமை முகமையால் வெளிச்சந்தையில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்டு, ஒவ்வொரு துறையிலும் சமஊதிய நிர்ணயம் கொண்ட ஒப்புவிக்கப்பட்ட நிரந்தரப் பணியிடங்களுக்கு மாற்றாகப் பணியமர்த்தப்படுவர்.

தமிழ்நாடு டிஜிட்டல்மயமாக்கல் (DiTN) வியூகத்தின் நோக்கங்களை எய்திடும் வகையில் மின்னாளுகைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவையான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு, ஒவ்வொரு துறைக்கும் ஏற்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.

7) தகவல் தொழில்நுட்பவியல் துறை " தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை" என மறுபெயரிடப்படும்.

மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கவும் மற்றும் மின் ஆளுகையின் வளர்ச்சியை உறுதிசெய்யும் நோக்கத்துடனும், தகவல் தொழில்நுட்பவியல் துறை 05.10.1998 அன்று உருவாக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பசேவைத் துறைகளின் வளர்ச்சியானது ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகும். எனவே, ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடைவதற்கு முன்முயற்சியுடன் கூடிய ஒருங்கிணைந்த கொள்கைவழி அணுகுமுறை தேவைப்படுகிறது.

முதல் கட்டமாக, வளர்ந்துவரும் தொழில்நுட்பப் பிரிவுக்குத் தலைமைதாங்கும் வகையில், தலைமை தொழில்நுட்ப அதிகாரி பதவி, தகவல் தொழில்நுட்பவியல் துறையில் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளது. வளர்ந்துவரும் மற்றும்

ஆழ்நிலைத் தொழில்நுட்பங்களில் தொடக்கநிலை நிறுவனங்கள் மூலம், புதுமைகளை உருவாக்குவதற்கு ஏதுவாக, தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (iTNT Hub) ஒன்று சென்னையில் அரசால் நிறுவப்பட்டு வருகிறது.

எனவே, மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்ப சேவைகளின் வளர்ச்சியை வலுப்படுத்த, இத்துறை, “தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை” என மறுபெயரிடப்படும்.

## 8) கணினித் தமிழுக்கான மென்பொருட்கள் உருவாக்குதல்.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தில், கணினித் தமிழ் தொடர்பான கருவிகள் மற்றும் மென்பொருட்களை உருவாக்குவதற்குக் கல்வி நிறுவனங்கள் மற்றும் மென்பொருள் நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகள் (Expression of Interest) பெறப்பட்டுள்ளன. இவை ஆய்வு செய்யப்பட்டு, பயனுள்ள திட்டங்கள் ரூ. 2 கோடி செலவினத்தில், தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் செயல்படுத்தப்படும்.

## 9) முதுநிலைத் தமிழியல் படிப்பு தொடங்குதல்.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தில், இளநிலைத் தமிழியல் பட்டக் கல்வி முடித்த மாணவர்கள், தமது மேற்கல்வியைத் தொடரும் வகையிலும், தமிழ் இலக்கணம், இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம், கலைகள் போன்றவற்றை ஆழ்ந்து கற்று, தமிழ் மொழிப் புலமையை வெளிப்படுத்தும் வகையிலும், முதுநிலைத் தமிழியல் படிப்பு ரூ.29.00 இலட்சம் செலவினத்தில் தமிழ் இணையக் கல்விக் கழகத்தில் துவக்கப்படும்.

10) தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் இதர உபகரணங்கள்.

தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்குத் தேவைப்படும் கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் இதர உபகரணங்கள் ரூ.1 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்.

## 11) நூல்கள் மின்னுருவாக்கம் மற்றும் தமிழ் மின்னூலகத்தினை நவீனப்படுத்துதல்.

தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழ் மொழி, பண்பாடு, வரலாறு சார்ந்த அரிய நூல்கள், ஓலைச்சுவடிகள் போன்ற ஆவணங்களை மின்னுருவாக்கம் செய்து, மின்னூலகத்தில் (www.tamildigitallibrary.in ) அளித்து வருகிறது. மின்னுருவாக்கம் செய்யப்பட்ட 50,000 நூல்கள் கொண்ட மின்னூலகத்தை, இதுவரை 2,11,65,112 பயனர்கள் பார்வையிட்டுள்ளனர். இம்மின்னூலகம் 1 இலட்சம் மின்னூல்களைக் கொண்ட பல்லூடக (Multimedia) மின்னூலகமாக ரூ. 1 கோடி செலவில் மேம்படுத்தி, நவீனப்படுத்தப்படும்.

## 12) தமிழ்நாடு கலாச்சார மின் நிலவரை ஏடு / தொகுப்பு (Digital Cultural Atlas of Tami Nadu).

தமிழ்நாடு கலாச்சார நிலவரை ஏடு / தொகுப்பு (Digital Cultural Atlas of Tami Nadu) என்பது தமிழ்நாடு பற்றிய விரிவான கலாச்சாரத் தகவல்களைத் தொகுத்து, பொதுமக்கள் காணும்படியாக வழங்கும் ஒரு கல்வி / அறிவுசார் வளமாகும்.

தமிழகத்தின் தெரியக்கூடிய (tangible) மற்றும் அருவமான (intangible) கலைவடிவங்களைத் தரமான காணொலி (Video), ஒளிப்படம் (Photo) மற்றும் ஒலி (Audio) ஆகியவற்றின் உதவியுடன் ஆவணப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது தொல்லியல் தளங்கள் மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்கள், பண்டைய கோயில்கள், பாரம்பரியக் காட்சிக் கலைகள் (Visual Arts) (ஓவியம், சிற்பம்) மற்றும் நிகழ்த்து கலைகள் (Performing Arts) (இசை, நடனம், பாடல்கள், கதைகள் மற்றும் நாடக மரபுகள்) ஆகியவற்றை உள்ளடக்கியது.

ஆவணப்படுத்தப்பட்ட மின் உள்ளடக்கங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக வரைபடக் காட்சியுடன் தமிழ் மற்றும் ஆங்கில விளக்கத்துடன் வலைதளத்தில் நில வரைபடமாகப் பதிவேற்றப்படும். முதற்கட்டமாக, மதுரை மண்டலத்தில் உள்ள மாவட்டங்களுக்கான கலாச்சார மின் நிலவரைத் தொகுப்பு, சுமார் ரூ. 1 கோடி செலவினத்தில், தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் உருவாக்கப்படும்.

## 13) கன்னியாகுமரியில் புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டடம்.

கன்னியாகுமரியில் 50,000 சதுர அடியில் ஆயத்த அலுவலக இடவசதியுடன் (Plug - and - Play facility) கூடிய புதிய தகவல் தொழில்நுட்பக் கட்டடம் ரூ.50 கோடி உத்தேச செலவினத்தில், உரிய ஆய்வுக்குப் பிறகு அமைக்கப்படும். இது தென் தமிழகத்தில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம்சார்ந்த சேவைத் துறையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு உதவும். இதற்கான செலவினத்தை, எல்காட் நிறுவனம் ஏற்கும்.

**த. மனோ தங்கராஜ்**

**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.